**பி.வா.சா.2 – மாரிமுத்து** **OS.No.2/2009** 08.06.2022

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் நக்கமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். வாதிகளின் தாத்தா திருவுத்தேவரை தெரியும். திருவுத்தேவருக்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியும். திருவுத்தேவரின் மகன் 1ம் பிரதிவாதி காளிமுத்துவிற்கு எத்தனை வாரிசுகள் என்பது பற்றி எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு நான்தான் விவரங்கள் சொன்னேன். 2ம் பிரதிவாதி பெருமாள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விவரங்களை 2ம் பிரதிவாதி பெருமாள்தான் என்னிடம் கூறினார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பெருமாள், 1ம் பிரதிவாதி காளிமுத்து மீது கிரையம் எழுதி கொடுப்பது சம்பந்தமாக பிராது தாக்கல் செய்துள்ளார். 3ம் பிரதிவாதி கி.காளிமுத்து தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றிய விவரம் தெரியும். அது அடமான வழக்கு ஆகும். நான் கையெழுத்து போட்ட பி.வா.சா.ஆ.1 ஒப்பந்தத்திற்கான முத்திரை தாள் யார் வாங்கி வந்தார் என்றால் பெருமாள் வாங்கி வந்தார். அந்த பத்திரத்தை ஒப்பந்தம் போட்ட அன்று காலைதான் வாங்கி வந்தார். பி.வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் என்ன தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. ஒப்பந்தத்தில் நான் பத்திர அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். நானும், பெருமாளும் அப்போது இருந்தோம். கிரைய ஒப்பந்தத்தில் 1ம் பிரதிவாதி தி.காளிமுத்து 3 கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். ஒப்பந்தம் என்னென்ன சொத்து சம்பந்தமாக போட்டுள்ளார்கள் என்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த சொத்து வாதியின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் நானும், பெருமாளும் சேர்ந்து மோசடியாக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் 1ம் பிரதிவாதி செய்து கொடுத்ததாக பெருமாளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(கற்றறிந்த 3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)**